## 5.12 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை 2003 – 2004 ஆண்டுக்கு நீட்டித்தல்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந–3) துறை

அரசாணை (நிலை) எண்.132 நாள் : 18.07.2003

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.292 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 04.12.96
2. அரசு ஆணை (நிலை) எண்.329 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 17.11.97
3. அரசு ஆணை (நிலை) எண்.239 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 05.10.98
4. அரசு ஆணை (நிலை) எண்.176 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 29.09.99
5. அரசு ஆணை (நிலை) எண்.129 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 04.08.2000
6. அரசு ஆணை (நிலை) எண்.159 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 24.10.2001
7. அரசு ஆணை (நிலை) எண்.93 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 25.06.2002

மேலும் படிக்க :

8. தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கடிதம் எண்.3051/டி1/ நாள் 22.05.2003 மற்றும் 26.06.2003

**ஆணை :**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில், தமிழ்நாட்டில் ரூ.1440.00 கோடி செலவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தை (பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்) செயல்படுத்தவும், முதல் கட்டமாக ரூ.2.40 கோடி செலவில் 14 மாவட்டங்களில் 1996–97ம் ஆண்டில் செயல்படுத்திட ஆணைகள் வெளியிடப்பட்டன. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட திட்டம் ரூ.11.594 கோடி செலவில், 1997–98ம் நிதியாண்டில் நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேலும் 7 மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை ரூ.12.00 கோடி செலவில் 1998–99ம் ஆண்டிற்கு நீட்டித்து ஆணைகள் வெளியிடப்பட்டது. பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் (சென்னை நீங்கலாக) 28 மாவட்டங்களிலும் திட்டத்தை ரூ.12.00 கோடி செலவில் 1999–2000ம் நிதியாண்டில் நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டது. பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.12.00 கோடி செலவில் 2000–2001ம் ஆண்டிற்கு இத்திட்டத்தை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது. பார்வை ஆறில் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ,22.00 கோடி செலவில் 2001–2002ம் ஆண்டிற்கு இத்திட்டத்தை நீட்டித்து அனைத்து மாவட்டங்களுக்கும் ஆணை வழங்கப்பட்டது, பார்வை ஏழில் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.22.00 கோடி செலவில் 2002–2003ம் ஆண்டிற்கு இத்திட்டத்தை நீட்டித்து அனைத்து மாவட்டங்களுக்கும ஆணை வழங்கப்பட்டது,

2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், பார்வை எட்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் 2003–2004ம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.22.50 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டியுள்ளார்.

3. மேற்படி கருத்துருவை அரசு கவனமாக, ஆராய்ந்து 2003–2004ம் நிதியாண்டில், நிதி ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.22.50 கோடியை (ரூபாய் இருபத்தி இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்திட ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது,

4. மேலே பத்தி, மூன்றில் வெளியிடப்பட்ட ஆணை கீழ்கண்ட நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் செயல்படுத்திட வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது

(அ) 2003–2004ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் ரூ.22.50 கோடி (ரூபாய் இருபத்தி இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) காலாண்டு அடிப்படையில் ஒவ்வொரு காலாண்டிற்கும் விடுவிக்கப்படும். இத்தொகை தொடர்புடைய தன் வைப்பு நிதியில் (P.D. Acount) வரவு வைக்கப்படும்.

(ஆ) தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் பொது வைப்பு நிதியில் உள்ள தேவைப்படும் தொகையை விடுவிக்கக் கோரி ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசின் நிதித்துறையை (வழி வகைகள்) (Ways & Means) அணுக வேண்டும்.

(இ) தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் தன் வைப்பு நிதியிலிருந்து (P.D. Account) தொகை விடுவிக்க வேண்டும் போது, நிதித்துறை (வழி வகைகள்) செலவினத்தின் நிலைக்கேற்ப தொகையை விடுவிக்கும்.

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.22.50 கோடியே (ரூபாய் இருபத்தியிரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) பத்தி நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் / நிபந்தனைகளின் அடிப்படையில், தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு காலாண்டு அடிப்படையில் பெற்று வழங்கிட சமூக நல இயக்குநர், சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேற்கண்ட செலவினம், கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும். 02–சமூக நலன். 103–மகளிர் நலன் – பத்தாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள். II – மாநிலத் திட்டம். LC – தமிழ்நாடு மகளிர் முன்னேற்றத் திட்டம். II– உதவித் தொகைகள். 02 – பொதுவான உதவித் தொகை (த.தொகு.எண்.2235–02–103–LC–1123)".

7. மேற்கண்ட தொகை பணமாக வழங்கப்படக்கூடாது. இத்தொகை கீழ்கண்ட தன்வைப்பு நிதிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

"K" – வைப்புத் தொகைகளும் மற்றும் முன்பணங்களும் (a) – வட்டியில்லாத வைப்புத் தொகைகள். 8443.00 – பொது வைப்புத் தொகைகள். 800 – ஏனைய வைப்புத் தொகைகள் AE – அரசு நிறுவனங்கள் கடிதங்கள் ஏனையவற்றின் வைப்புத் தொகைகள் 28 – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக வைப்புத் தொகை (த.தொ.கு.எண்.8443–00–800– AE –280 / D)".

8. மகளிர் திட்டமானது 2000–2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருவதால், இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் உபயோகத்தினை ஒரு தனியார் அமைப்பின் மூலம் அதாவது பல்கலைக் கழகங்கள் அல்லது நற்புகழ் பெற்ற நிறுவனங்களின் மூலம் கணிப்பாய்வு செய்து ஒரு அறிக்கையினை ஜனவரி 2004–க்குள் அரசு நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படுகிறார், மேலும், இதற்காக ஆகும் செலவினை அதி கபட்சம் ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம மட்டும்) 2003–2004ம் நிதியாண்டில் மகளிர் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவழிக்க வேண்டுமெனவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்,

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.346/து.செ (V.N.P.) / 2003–1, நாள் : 11.07.2003–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி.கே. கரியாலி**
அரசு செயலர்